உ
சிவமயம்

**பஞ்ச புராணம்** **தொகுப்பு 6**

### தேவாரம்

தலம்: திருவாவடுதுறை

பண்: காந்தாரபஞ்சமம்
இராகம்: கேதாரகௌளை

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன் றெமக்கில்லையே
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே.

### திருவாசகம்

போற்றியோம் நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோம் நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோம் நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோம் நமச்சி வாய
சயசய போற்றி போற்றி.

### திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா! நீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே.



### திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்பவெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

### திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் - எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான - பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே - குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே - கதிர்காமப் பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்